30.07.2024.

O.S.No.124/2017

**திரு/திருமதி. நவீன் குமார் Pw1**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எனது வழக்குரையிலும் வா.சா.ஆ.7லும் எனது விலாசமும் 1ம் பிரதிவாதியின் விலாசமும் ஒரே முகவரியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.3 ஆகியவைகளிலும் முதல் பிரதிவாதியின் விலாசமும் எனது விலாசமும் ஒரே முகவரி என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் பிரதிவாதி பதில் தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். எதிர் வழக்குரையிலும் முதல் பிரதிவாதி தனது விலாசத்தை காண்பிக்கும் Statement of Register Address எதனையும் இணைக்கவில்லை என்றால் சரிதான். கிரைய சொத்து பற்றி முழு விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும் 5 சர்வே எண் கொண்டது உட்பிரிவுகள் ஞாபகம் இல்லை குறிப்பாக சர்வே எண்.245,246 ஆகியவை மட்டும் ஞாபகம் உள்ளது. வழக்கு தொடுப்பதற்கு முன்னர் இடத்தை பார்வையிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 79 செண்ட் ஆகும். ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன்னர் வில்லங்க சான்றை சரி பார்த்தேன். அந்த வில்லங்க சான்றை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதியின் மூலமும் அக்கம் பக்கம் விசாரித்து தாவா சொத்தின் மதிப்பை தெரிந்துகொண்டேன். தாவா சொத்தின் சந்தை மதிப்பை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 பவர் பத்திரத்தில் சாட்சியாக திரு.உதயன் எனக்கு தெரிந்த நபர் 2வது சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். வா.சா.ஆ.3 பவர் பத்திரத்தில் சாட்சி திரு.உதயன் முன்னர் பைணான்ஸ் தொழில; கோழி பண்ணை வைத்துள்ளார். தற்போது கோழி பண்ணை வைத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4லும் முதல் சாட்சியாக கையொப்பம் செய்தவர் உதயன் 2வது சாட்சியான பாபு என்பவரும் எனக்கு தெரிந்த நபர்தான் அவர் எங்களது பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர். வா.சா.ஆ.4 ஒப்பந்தத்தில் வா.சா.ஆ.1,2 ஒப்படைவு சம்பந்தமாக விபரம் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ல் வா.சா.ஆ.1,2 ஒப்படைவு சம்பந்தமாக விபரம் உள்ளதா என்றால் இல்லை. சாட்சி தானாக அசல் ஆவணம் கையில் ஒப்படைக்கப்பட்டது என்று கூறுகிறார். இந்த விபரத்தை நான் என் முதல் விசாரணையிலே அல்லது

வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4ல் ரூ.10,00,000/ பணபட்டுவாடா சாட்சிகள் முன்னிலையில் செய்யப்பட்டதாக கூறபட்டுள்ள நிலையில் அந்த சாட்சிகள் யார் என்றால் எஸ். உதயகுமார், ராமானுஜம் ஆகியோர்கள் ஆவர்.வா.சா.ஆ.4ல் ரூ.8,50,000/ பணபட்டுவாடா சாட்சிகள் முன்னிலையில் செய்யப்பட்டதாக கூறபட்டுள்ள நிலையில் அந்த சாட்சிகள் யார் என்றால் இ.உதயன், எஸ். உதயகுமார் ஆகியோர் ஆவார். ரூ.8,50,000/ கொடுக்கப்பட்டபோது உடனிருந்த சாட்சியான இ.உதயன்தான் நான் மேலே குறிப்பிட்டுள்ள நிதி நிறுவனம் நடத்தும் உதயன் ஆவார். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் முன்பணம் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன். முன் பணமும் அதன் பின்பு மாறிய மறு பயன்களும் 1ம் பிரதிவாதியிடம்தான் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதியிடம் மீதி கிரைய தொகை ரூ.3.45,000தை பெற்று கொண்டு கிரைய பத்திரத்தை எழுதிகொடுக்கும்படி கேட்டதாக கூறியுள்ள நிலையில் அதன் பொருட்டு ஏதேனும் எழுத்துபூர்வமாக அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் சரிதான். வா.சா.ஆ.7ல் 2ம் பிரதிவாதி எனக்கு ஒரு அறிவிப்பு அனுப்பியுள்ள நிலையில் நான் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு பவர் பத்திரத்தை ரத்து செய்தது குறித்து ஏதேனும் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் இல்லை வாய்மொழியாக சொன்னார்.

(நேரமின்மையால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)